தரம் **06**

பாடசாலை மட்ட மூன்றாம் தவணை மதிப்பீடு - 2023 (2024)

# புவியியல்

புள்ளிகள்

சுட்டெண்:

நேரம் : 01.30 மணித்தியாலம்

## பகுதி - I

○ **பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

01) இலங்கையில் காணப்படும் மாகாணங்களின் எண்ணிக்கை யாது?
1. 05  2. 09  3. 12  4. 22

02) பாடசாலை அமைந்துள்ள மிகச் சிறிய நிர்வாக அலகு யாது?
1. மாவட்டம்  2. மாகாணம்
3. பிரதேச செயலாலர் பிரிவு  4. கிராம உத்தியோகத்தர் பிரிவு

03) சமவெளிப்பகுதிகளில் செய்கை பண்ணப்படும் பயிர்ச்செய்கை யாது?
1. நெற்செய்கை  2. தேயிலை  3. தென்னை  4. குரக்கன்

04) நிலத்தை வளப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்களுள் உள்ளடங்காதது,
1. உமி  2. வைக்கோல்  3. தும்பு  4. பொலித்தீன்

05) உலகின் மிகப்பெரிய தீவு எது?
1. கிறீன்லாந்து  2. சிசெல்ஸ்  3. தாய்வான்  4. மடகஸ்கார்

*(5x2 = 10 புள்ளிகள்)*

○ **அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

06) அதிகளவினான சூரிய வெப்பம் காணப்படும் போது .......................................... வானிலை நிலைமைகள் ஏற்படும்.

07) அம்பலாங்கொடை பிரதேசத்தில் .......................................... கைத்தொழில் இடம் பெறும்.

08) மரங்களின் விதை பரவுவதற்கு உதவும் உயிரினம் .......................................... ஆகும்.

09) தாவரங்களின் முறையான வளர்ச்சிக்கு .......................................... வாயு அவசியமாகும்.

10) இலங்கை .......................................... கண்டத்தில் அமைந்துள்ளது.

| |
|---|
| பிரம்பு, வரண்ட, ஆபிரிக்கா, முகமூடி, மூடுபனி, வௌவால், ஆசியா, ஆத்தை, ஒட்சிசன், நைதரசன். |

*(5x2 = 10 புள்ளிகள்)*

○ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.**

**11)** வானிலை நிலைமைகள் எப்போதும் ஒரே மாதிரியாகக் காணப்படும். (   )

**12)** நத்தார் பண்டிகை பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படும். (   )

**13)** வளி மாசடைதல் காரணமாக ஆஸ்துமா நோய் ஏற்படுகின்றது. (   )

**14)** வீட்டுக் கழிவுகளிலிருந்து உயிர் வாயு உற்பத்தி செய்யப்படும். (   )

**15)** புராதன நீர்வள நாகரிகத்தின் மத்திய நிலையமாக அனுராதபுரம் காணப்படுகின்றது. (   )

*(5x2 = 10 புள்ளிகள்)*

* **தொடர்புபடுத்துக**

| | | | |
|---|---|---|---|
| **16)** | மழைவீழ்ச்சி | a. | கண்டி |
| **17)** | இடம் பெயர் பறவை | b. | மில்லிமீற்றர் |
| **18)** | இயற்கை சக்திவளம் | c. | திருகோணமலை |
| **19)** | தலதாமாளிகை | d. | காவியுடைக்கள்ளி |
| **20)** | இயற்கைத் துறைமுகம். | e. | விறகு |

*(5x2 = 10 புள்ளிகள்)*

## பகுதி - II

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01)** 1) a. உங்கள் பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தையும், மாகாணத்தையும் குறிப்பிடுக.

........................................ ........................................

b. திசையினை அறியப்பயன்படுத்தப்படும் கருவி எது?

........................................

2) பின்வரும் வானிலை மூலகங்களை அளவிடும் கருவிகளைக் குறிப்பிடுக.

வெப்பநிலை ........................................

காற்றின் வேகம் ........................................

3) வானிலை முன்னறிவிப்புக்களினால் நன்மையடைவோர் இருவரைக் குறிப்பிடுக.

........................................ ........................................

4) காற்றினால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

........................................

........................................

(4+2+2+4=12 புள்ளிகள்)

02) 1) a. விலங்குகளினால் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

b. நுளம்பு மூலம் பரவக்கூடிய நோய்கள் 2 தருக.

.......................................................... ..........................................................

2) இலங்கையில் பின்பற்றப்படும் சமயங்களைக் குறிப்பிடுக.

.................................. .................................. .................................. ..................................

3) உமது பிரதேசத்தில் நீர் காணக்கூடிய சேவைகள் இரண்டு தருக.

.......................................................... ..........................................................

4) அரசாங்கத்தினால் சலுகை விலைகளில் வழங்கப்படும் சேவைகள் இரண்டு தருக.

.......................................................... ..........................................................

(4+4+2+2=12 புள்ளிகள்)

03) 1) a. நீரின் பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

b. நீரை பாதுகாக்கும் வழிமுறைகள் இரண்டு தருக.

..............................................................................................................................

..............................................................................................................................

2. அமில மழை பொழிவதனால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

.......................................................... ..........................................................

3) வீட்டில் சக்தி வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகள் இரண்டு தருக.

..............................................................................................................................

..............................................................................................................................

4) சூரிய மின்கலத்தின் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

.......................................................... ..........................................................

(4+2+2+4=12 புள்ளிகள்)

04) 1) a. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது? ..........................................

b. இலங்கையின் தலைநகரம் எது? ..........................................

2) இலங்கையின் அமைவிடம் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

3) பின்வரும் தீவுகள் அமைந்துள்ள சமுத்திரத்தினைக் குறிப்பிடுக.

1. சிசெல்ஸ் ..........................................
2. பிரித்தானியா ..........................................
3. தாய்வான் ..........................................
4. மாலைதீவு ..........................................

(4+4+4=12 புள்ளிகள்)

05) a. பின்வரும் இலங்கைப் புறவுருவப் படத்தினை அவதானித்து கேட்கப்படும் அம்சங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்தினை அடைப்பினுள் எழுதுக.

1. அநுராதபுரம் (.........)
2. பிலிமத்தலாவ (.........)
3. மன்னார் (.........)
4. பதுளை (.........)




(4x 1½ = 6 புள்ளிகள்)

b. பின்வரும் உலகப் புறவுருவப் படத்தினை அவதானித்து கேட்கப்படும் அம்சங்களுக்கு பொருத்தமான ஆங்கில எழுத்தினை அடைப்பினுள் எழுதுக.




1. கிறீன்லாந்து (.........) 2. இந்தியா (.........)

3. ஆபிரிக்கா (.........) 4. பசுபிக் சமுத்திரம் (.........)

(4x 1½ = 6 புள்ளிகள்)

தரம் 06

**மூன்றாந் தவணைப் பரீட்சை – 2023**

**புவியியல்**

**விடைகளும் புள்ளித்திட்டமும்**

பகுதி -I

01. 01) **2** 02) **4** 03) **3** 04) **4** 05) **1**

06) வரண்ட 07) முகமூடி 08) வௌவால்

09) நைதரசன் 10) ஆசியா

11) × 12) × 13) ✓ 14) ✓ 15) ✓ 16) b 17) d 18) e 19) a 20) c

(20x2=40 புள்ளிகள்)

பகுதி -II

**01.** 1) a. அம்பாறை

b. கிழக்கு மாகாணம்

b திசையறி கருவி

2) வெப்பமானி, காற்று விசைமானி

3) விவசாயிகள், மீனவர்கள்

4) சூழல் குளிர்ச்சியடையும், நெல் உலர்த்தல், ஆடை உலர்த்தல்

**02)** 1) a. பயிர்களை நாசம் செய்யும் நத்தைகளை அழிக்கும், கழிவுப் பொருட்களை உண்டு சூழலை சுத்தம் செய்யும், மரங்களின் விதைகளை பரவுவதற்கு

b. டெங்கு, மலேரியா, யானைக்கால்

2) இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம்

3) சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, பாதுகாப்பு

4) போக்குவரத்துப் பருவக்காலச் சீட்டுக்களை வழங்குதல், ஒசுசலா மூலம் சலுகை விலைகளில் மருந்து வகைகளை வழங்குதல்.

**03)** 1) a. பயிர்ச் செய்கைக்கு, மின்சார உற்பத்திக்கு, சமையல் தேவைகளுக்கு

b. நீர் விரயத்தையும், முறையற்ற பயன்பாட்டினையும் தடுத்தல்

2) நீர் மாசடைதல், காடுகளின் அழிவு, மண்சரிவு

3) வெப்பத்தை இழக்காத விறகு அடுப்புக்களை பயன்படுத்தல், உணவு சமைத்து முடிந்தவுடன் வாயு அடுப்பை பயன்படுத்தல்

4) இலவசமாக மின்சாரத்தைப் பெயறலாம், சூழல் மாசடையாத சக்தி வளமாகும்.

**04)** 1) a. பாக்குநீரினை

b. ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக் கோட்டை

2) பருவக்காற்றுச் செல்வாக்கினால் மழை கிடைக்கும், இலங்கை தீவாக இருப்பதனாலும், இந்து சமுத்திரத்தில் வீசும் காற்றினாலும் வெப்பநிலை குறைநவடைவதுடன் வருடம் முழுவதும் மழை கிடைக்கும்.

3) சிசெல்ஸ் - இந்து சமுத்திரம்
பிரித்தானியர் - அத்திலாந்திக் சமுத்திரம்
தாய்வான் - பசுபிக் சமுத்திரம்
மாலைதீவு - இந்து சமுத்திரம்

**05)** a) 1 - I
2 - C
3 - B
4 - F

b) 1 - E
2 - C
3 - A
4 - G